MELUR MUNICIPALITY

Minutes of the Council Meeting held on **13.01.2023** (Urgent)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| | 13.01.2023 **ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை** 12.00 **மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்டம்**<br>**முன்னிலை: திரு.உ.முகமதுயாசின், நகர்மன்றத்தலைவர்** | |
| 224 | மன்றப்பொருள் எண்.1<br>**மேலூர் நகராட்சிக்குட்பட்ட** 27 **வார்டுகளில் உள்ள அடிபம்பு மற்றும் சிறுமின்விசை மோட்டார் மற்றும் பேனல் போர்டுகளை பராமரிக்கும் பணிக்கு ஒப்பந்தகாலம்** 31.12.2022 **அன்றுடன் முடிவடைய உள்ளது.** Outsourcing **மூலம் குடிநீர் விநியோகப் பணிகள் மேறகொள்ள கருத்துரு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. குடிநீர் விநியோக பிரச்சனைகளை உடனுக்குடன் நிறைவேற்றும் பொருட்டு தற்பொழுது ஒப்பந்தப்பணி பார்த்து வரும் நிறுவனத்திற்கு அவர்கள் கொடுத்துள்ள பழைய ஒப்பநதப்புள்ளி விலைவிகிதத்தில்** 01.01.2023 **முதல்** 30.06.2023 **வரை ஆறு மாத காலத்திற்கு பணியினை நீட்டிப்பு செய்வதற்கும் அதற்கான செலவினம் ரூ.** 655000/-**க்கு மன்றத்தின் அனுமதிக்கு.**<br>**அலுவலகக்குறிப்பு**<br>**மன்றம் அனுமதிக்கலாம்.** | அனுமதிக்கப்பட்டது. |
| 225 | மன்றப்பொருள் எண்.2<br>**மேலூர் நகராட்சிக்குட்பட்ட தெருவிளக்குகளை பராமரிப்பு மற்றும இயக்குதல் பணி தனியார் பணியாளர்கள் மூலம் பார்க்கப்பட்டு வருகிறது. தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தேவையான மின்சாதனபொருட்கள் விநியோகயும் செய்யும் பணிக்கான ஒப்பந்த காலம்** 31.12.2022 **உடன் முடிவடைகிறது. மேற்கண்ட பணிக்கு திட்ட மதிப்பீடு தயார்செய்து உரிய நிர்வாக அனுமதி வேண்டி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கபட்டுள்ளது. உரிய நிர்வாக அனுமதி பெறப்படும் வரை தற்பொழுது விநியோகம் செய்து வரும்** Swastick traders **நிறுவனம் கொடுத்துள்ள பழைய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில்** 01.01.2023 **முதல்** 31.01.2023 **வரை ஒரு மாத காலத்திற்கு பணியினை நீட்டிப்பு செய்வதற்கும் அதற்கான செலவினம் ரூ.** 109000/-**க்கு மன்றத்தின் அனுமதிக்கு.**<br>**அலுவலகக்குறிப்பு**<br>**மன்றம் அனுமதிக்கலாம்.** | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 226 | <u>மன்றப்பொருள் எண்.3</u><br><br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட மேல்நிலை நீர்தேக்கதொட்டி மற்றும் 26 வால்வுகளை வைத்து Pumping and Distribution பணிகள் செய்ய பொறியியல் பிரிவில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் தனியார் ஒப்பந்த நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பந்தப்புள்ளி வரும் 30.11.2022 அன்றுடன் முடிவடைய உள்ளதாலும், குடிநீர் பராமரிப்பு பணிகளை Outsourcing மூலம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி கோரப்பட்டுள்ளது. தற்போது நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றும்பொருட்டு நடப்பில் உள்ள ஒப்பந்தப்பணியை நிர்வாக அனுமதி பெறப்படும் வரை பணியின் அவசர அவசியம் கருதி, தற்போது பணி பார்த்து வரும் ஒப்பந்ததாரருக்கு அதே விலை விகிதத்தில் 01.12.2022 முதல் 30.06.2023 வரை ஏழு மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.7.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 227 | <u>மன்றப்பொருள் எண்.4</u><br><br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 ல் பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கையின்படியும், நகர்மன்றத்தலைவர் அவர்களின் பரிந்துரையின்படியும், மூவேந்தர் நகர் 3வது தெருவில் மழைநீர் வடிகால் (Unicode: 116016S129) அமைக்கும் பணிக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீடு தயார்செய்யப்பட்டமைக்கும், அதற்கான செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td>228</td>
<td>
<u>மன்றப்பொருள் எண்.5</u>

15வது நிதிக்குழுமான்யம் 2022-23ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளநாதன்பட்டி பகுதியில் நகர்நல மையம் அமைக்கும் கீழ்க்கண்ட பணிக்கு 10.01.2023 அன்று மின்ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மின் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

<table>
<tr><th>வ. எண்.</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில்</th><th>மதிப்பீடு ரேட்டைவிட குறைந்த அளவு ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம்</th><th>மதிப்பீடு ரேட்டை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>2</td><td>3</td><td>4</td><td>5</td></tr>
<tr><td>1.</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 4, மேலூார் டவுன் வார்டு ஏ, பிளாக் 27, டி.எஸ்.எண்.4, வெள்ளநாதன்பட்டி பகுதியில் நகர்நல மையம் அமைக்கும் பணி.</td><td>25.00</td><td>திரு.ஆர்.செல்வமுருகன்<br>-0.01 % குறைவு</td><td>திரு.லத்தீப்<br>0.55 % அதிகம்</td></tr>
</table>

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

அலுவலக குறிப்பு

மேற்கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட திரு.செல்வமுருகன் -0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>229</td>
<td>
<u>மன்றப்பொருள் எண்</u>.6<br>
மேலூர் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் மெயின்ரோடு ,பஸ்நிலையம், சேனல்ரோடு போன்ற முக்கிய பகுதிகளில் திடக்கழிவுகளை அகற்றப்பட்டு வரும் டிப்பர்லாரி TN59BX 1344 தகுதிச்சான்று பெரும்பொருட்டு மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் மேற்படி பகுதிகளில் திடக்கழிவுகளை அப்புறப்படுத்தும் பணி தொடர்ந்து செயல்படுத்தப்படவேண்டும் என்பதாலும், மேற்படி டிப்பர் லாரி மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு தகுதிசான்று பெறும் காலம் வரை வாடகை அடிப்படையில் டிராக்டர் மூலம் திடக்கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><td>வ.எண்.</td><td>பெயர் மற்றும் முகவரி</td><td>தொகை ரூ.</td></tr>
<tr><td>1</td><td>எஸ்.சீனிவாசன், த/பெ சிவக்குமார்<br>4ஏ, நடுத்தெரு, கருத்தப்புளியம்பட்டி, மேலூர்</td><td>2850</td></tr>
<tr><td>2</td><td>பி. பால்பாண்டி த/பெ பால்பாண்டி,<br>கொட்டகுடி, மேலூர்</td><td>2970</td></tr>
</table>
இதில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.சீனிவாசன் என்பவரது விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
அலுவலகக்குறிப்பு<br>
1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2) பொதுசுகாதார அவசியம் கருதி வாடகை அடிப்படையில் டிராக்டர் மூலம் திடக்கழிவுகளை அப்புறப்படுத்துவற்கு விலைப்புள்ளி கோரியதையும், குறைவான விலைப்புள்ளி வழங்கிய எஸ்.சீனிவாசன், த/பெ சிவக்குமார் என்பவருக்கு உத்திரவு வழங்கியதையும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கும் அனுமதிக்கலாம்.
</td>
<td>1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 230 | மன்றப்பொருள் எண்.7 | அனுமதிக்கப்பட்டது. |

மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்படி, இந்நகராட்சிக்குட்பட்ட கருத்தபுளியம்பட்டியில் கீழ்க்கண்ட பணிக்கு 10.01.2023 அன்று மின்ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மின் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | மதிப்பீடு ரேட்டைவிட குறைந்த அளவு ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் | மதிப்பீடு ரேட்டை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட கருத்தபுளியம்பட்டி கிராமம், வார்டு D , பிளாக்-23, நகர புல எண்.35ல் 4300ச,மீ )1 ஏக்கர் 7,5 சென்ட்(, கிராம நத்தம் என்ற வகைப்பாடு கொண்ட புலத்தின் எல்லைகளில் சிமெண்ட் தூண் அமைத்து கம்பி வேலி அமைக்கும் பணி | 2.45 | திரு.ஆர்.செல்வ முருகன் -0.09 % குறைவு | திரு.எஸ்.செந்தில் குமார் 7.73 % அதிகம் |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

அலுவலக குறிப்பு

மேற்கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட திரு.செல்வமுருகன் -0.09% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 231 | **மன்றப்பொருள் எண்**.8<br><br>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA.IV) அரசாணை எண்.**173** நாள்.**08.12.2022** ன்படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**11112/2022**/டிபி2 நாள்.**14.12.2022**ன் கடிதத்தின்படியும், உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி நிதி **2022–23**ன் கீழ், இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தினை புதிதாக கட்டும் பணி ரூ.**742.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் பதிவு செய்யலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 232 | **மன்றப்பொருள் எண்**.9<br><br>**இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு கொரோனா தடுப்பு பணிக்கு தேவையான பொருட்கள் வாங்க நகர்மன்ற தீர்மானம் எண்**. 238 **நாள்**.31.12.2021 **ல் ரூ**.3,50,000**க்கு அனுமதிக்கப்பட்டு**, **அதன்பேரில் விலைப்புள்ளி கோரப்பட்டு**, **குறைவான விலைப்புள்ளி வழங்கிய ராம்** & **கோ நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு இந்நகர்மன்ற தீர்மான எண்**. 252 **நாள்** 25.01.2022**ன்படி வழங்கப்பட்டு அதில் குறிப்பிட்டுள்ள கோவிட்**-19 **தடுப்பு மருந்துப்பொருட்கள்** 16.08.2022**ல் விநியோகம் செய்யப்பட்டதில்**,**செலவினம் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகையினை விட கூடுதலாக ரூ**.1,34,508/- **வரப்பெற்றுள்ளதால்**, **மேற்படி தொகையினை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதிக்கு**.<br>**அலுவலகக்குறிப்பு**<br><br>**மன்றம் அனுமதிக்கலாம்**.<br><br>**ந**.**க**.**எண்**.2572/2021/**எச்**1 | அனுமதிக்கப்பட்டது. |

ஆணையாளர்,
மேலூர் நகராட்சி.